# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.196/2016

பி.வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 29–01–2026.

பெயர் = சுந்தரமகாலிங்கம்

பி.வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் கு.வி.–

(1) நான் Autoconsulting தொழில் செய்கிறேன். இந்த வழக்கில் இரண்டு லக்க சொத்துக்கள் உள்ளதா என்றால் ஒரு சொத்துதான் உள்ளது என சாட்சி கூறுகிறார். நான் தவறாக சொல்கிறேன் இரண்டு லக்க சொத்துக்கள் காண்பித்து ஒரு லக்கச்சொத்து வாதிக்கு பாத்தியம் என்றும், 2ம் லக்கச்சொத்து அரசுக்கு பாத்தியம் என்றும் கேட்டுள்ளார் என்றால் இரண்டாம் இலக்கச்சொத்து தனக்கு பாத்தியம் என சாட்சி கூறுகிறார். 1ம் லக்கச்சொத்து வாதிகளுக்கு பாத்தியம் என்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். என்னுடைய இடம் கிழமேல் 60 அடி. 60 அடிக்கு வடக்கே நான் சுகுமாரிடம் வாங்கிய இடம் உள்ளது. 60 அடிக்கு கிழக்கே தென்வடல் தெரு உள்ளது. தென்வடல் தெரு பஞ்சாயத்து இடம். நான் கிரையம் வாங்கிய இடம் தென்வடல் 33 கிழமேல் 60 அடி இடம் ஆகும். 54 அடியில் வீடு கட்டிவிட்டு 6 அடி இடத்தை கிழக்கே விட்டுள்ளேன் என சாட்சி கூறுகிறார். மேற்கே இடம் இல்லை. நான் கட்டியுள்ள செப்டிக்டேங்க் கிழமேல் 7 அடி இருக்கும். செப்டிக்டேங்க் என் வீட்டிற்கு மேற்கே உள்ளது என்றால் சரிதான். என் வீடு ஆதியில் 1977ல் காலியிடமாக கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். 1978ல் மண்சுவர் ஓட்டுவீடு கட்டினேன் என்றால் சரிதான். அதே அடித்தளத்தில் சென்ட்ரிங் சுவர் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். என் வீட்டை என் அப்பாவும், அம்மாவும் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். ரெங்கசாமி நாயக்கர் வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார்கள் அவர்கள் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1ல் உள்ள விஸ்தீரணம் சரியா என்று எனக்குத் தெரியவில்லை.

(2) கிழக்கே நடராஜ செட்டியார் புஞ்சை இருப்பதாக உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. என்னுடைய புஞ்சைக்கும், கோச்சடை ஆசாரி புஞ்சைக்கும் வடக்கே உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது சரிதான்.

கௌரவ பொதுநிலத்திற்கும் கிழக்கு என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. ரெங்கசாமி புஞ்சைக்கும் தெற்கு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் தாவா 2ம் லக்கச்சொத்து இல்லை என்றால் சரியல்ல. எந்த வருடம் சர்வே எடுத்தார்கள் என தெரியாது. என் சொத்து 68/2பி என்றால் சரிதான். அதில் 2 ஏர்ஸ் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ.2ல் கிழமேல் 20.6 மீட்டர் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது எத்தனை அடி அளவு என எனக்குத் தெரியாது. தென்வடலாக கிழக்கே 11.2 மீட்டர், மேற்கே 11 மீட்டர் போடப்பட்டுள்ளது அதன் அடியளவுகள் தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2ல் அதிக அடியளவுகள் போட்டு பட்டா பெற்றுள்ளேன் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 பட்டாவும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வீடு கட்டுவதற்கு பிளான் பி.வா.சா.ஆ.4 எந்த வருடம் வாங்கினேன் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வாங்கிவிட்டேன். பி.வா.சா.ஆ.4 வழக்கிற்காக மோசடியாக பெறப்பட்டது அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. செப்டிக்டேங்கை 2016ம் வருடம் கட்டினேன். ஏற்கனவே இருந்ததைதான் திரும்பகட்டினேன் என சாட்சி கூறுகிறார். பி.வா.சா.ஆ.4ல் செப்டிக்டேங்க் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

(3) பி.வா.சா.ஆ.4ல் செப்டிக்டேங்க் காண்பிக்கப்படவில்லை என்பதால் அதனை அகற்ற நான் சட்டப்படி கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வந்து தாவா இடத்தை பார்வையிட்ட பிறகு தான் நான் செப்டிக்டேங்க் கட்டினேன் என்றால் சரியல்ல. ஆணையர் பார்வையிட வரும்போது நாங்கள் வேலையை ஆரம்பித்துவிட்டோம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே ஆரம்பித்தோம் என சாட்சி கூறுகிறார். தாவா 2ம் லக்கச்சொத்து பொதுத்தெரு அதனை ஆக்கிரமித்து நான் செப்டிக்டேங்க் கட்டியுள்ளேன் அதனை சட்டப்படியாக அகற்றிகொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>3 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் கு.</u>வி

தாவா 2ம் லக்கச்சொத்து அரசுக்கு பாத்தியமான பொதுச்சொத்து என்றால் சரியல்ல. மேற்படி சொத்தானது கிராம பொதுமக்களுக்கு பயன்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனை ஆக்கிரமிப்பு செய்தால் அகற்றுவதற்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. மறுவிசாரணை இல்லை

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.01.29 17:41:28 +0530